# தம்பலகமம் பிரதேச சபை

## திருகோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 27 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 06 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 நவம்பர் 23 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்பலகமம் பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சுக்கு சொந்தமான ரூபா 7,650,000 பெறுமதியான ஒரு வாகனம் ஐந்தொகையில் சபையின் சொத்தாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) பேரேட்டின் படி 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மீள வழங்கக் கூடிய வைப்புக்களின் பெறுமதி ரூபா 510,303 ஆகக் கணக்கிடப்பட்ட போதிலும் இம் மீதியானது நிதிக்கூற்றுக்களின் படி ரூபா. 837,052 ஆகக் கணக்கிடப்படாமையால் மீள வழங்கக் கூடிய வைப்புக்களின் பெறுமதி ரூபா. 326,749 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(இ) பேரேட்டின் படி 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான விழா முற்பணக் கணக்கு மீதி ரூபா. 128,750 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களின் அம்மீதி ரூபா. 155,000 ஆகக் காட்டப்பட்டமையால் விழா முற்பணக் கணக்கு மீதி ரூபா. 26,250 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 ஆவணச் சான்றுகளின்மை

ரூபா 53,684,419 பெறுமதியான காணி கட்டிடங்கள், பொறித்தொகுதிகள், மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் மற்றும் தளபாடங்கள் ஆகியவற்றுக்கான நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் I | |
| (i) அத்தியாயம் I விதி 5(12) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் X விதி 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவு | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனம் கண்டு அவற்றின் ஆண்டு பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் செயற்பாடுகள் ரூபா 438,752 மீண்டு வரும் செலவினத்திற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செயற்பாடுகள் ரூபா 2,557,015 தொகையான வருமானத்திற்கு மிகையான செலவினத்தினை விளைவித்திருந்தது.

2.2 முத்திரைக் கட்டணங்கள்

---

2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு மார்ச் வரையிலான காலத்துக்கு ரூபா.248,534 தொகையை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 ஒப்பந்த நிர்வாகம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புறநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஒரு விளையாட்டு மைதானத்தினை புனரமைப்பு வேலைகள் அனைத்தும் திருப்தியாக பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் சிபார்சு செய்யப்பட்டு ரூபா 3,345,139 ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும் தீந்தை பூசுதல், நீர்த் தாங்கி பொருத்துதல் போன்ற செய்யப்படாத வேலைகளுக்காகவும் ரூபா 191,875 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மாணியத்தின் கீழ் வாகன தரிப்பிட சுற்று மதில் ரூபா 790,460 கிரயத்தில் நிர்மாணித்தல் தொடர்பாக Plinth Plastering செய்யப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டு ரூபா 59,400 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 25 ஆம் திகதி இவ் வேலை முற்றாக செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நிர்மாணிக்கப்பட்ட மதிலின் இரண்டு பக்கமும் $300m^2$ பரப்பளவிற்கு பூச்சு பூசப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் உறுதிப்படுத்தி ரூபா 128,400 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுப் பரிட்சிப்பில் $140m^2$ பரப்பளவுடைய மதில் மட்டுமே பூசப்பட்டு காணப்பட்டது. எனவே பூசப்படாத $160m^2$ ஆக ரூபா 68,480 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

மேலும் நிர்மாணிக்கப்பட்ட $300m^2$ பரப்பளவைக் கொண்ட மதிலில் $162.6m^2$ பரப்பளவுப் பகுதிக்கே தீந்தை பூசப்பட்ட போதிலும் $437m^2$ பரப்பளவிற்கு தீந்தை பூசப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டு ரூபா 109,687 தொகை வழங்கப்பட்டிருந்தது. எனவே $274.4m^2$ பரப்பளவிற்காக ரூபா 68,875 தொகை மேலதிக கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்ததுடன் மதிலின் அத்திவாரத்தின் இரண்டு பக்கமும் மண் நிரப்பி அமுக்கியினால் அமுக்குவதற்காக ரூபா 4,375 செலுத்தப்பட்டிருந்த போதிலும் இவ்வேலை முற்றாக செய்யப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ பலவீனம்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) சபையினால் 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட ஒரு சனசமூக நிலையத்திற்கு சபையானது மீண்டும் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் ரூபா. 399,608 பெறுமதியான ஒப்பந்தத்தை வழங்கியுள்ளது.

(ஆ) ஏனைய நிறுவனங்களிடம் நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 05 வாகனங்களை சபை கடந்த 02 வருட காலமாக பயன்படுத்தி வந்த போதிலும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு 2016 ஆகஸ்ட் 25 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த 09 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் காணாமல் போயிருந்தன. காணாமல் போன அப்புத்தகங்களுக்கு சபையின் முன்னாள் செயலாளர் மற்றும் 05 ஊழியர்கள் தாங்களே அவற்றிற்கு பொறுப்பு எனவும் அவற்றினால் ஏற்படும் நட்டங்களை தாங்கள் செலுத்துவதாகவும் 2015 பெப்ரவரி 17 ஆம் திகதிய கடிதம் மூலம் ஏற்றுக்கொண்டு 2016 பெப்ரவரி 08 ஆம் திகதியன்று 02 பற்றுச்சீட்டுப் புத்தகங்களுக்காக ரூபா 160,900 தொகையை செலுத்தியிருந்தனர். எனினும் கிழக்கு மாகாண சபை நிதி ஒழுங்கு விதி 71.3 இன் பிரகாரம் குறித்த ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளுர் கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து 2012 ஆம் ஆண்டில் அலுவலக கட்டிட நிர்மானத்திற்காக பெறப்பட்ட ரூபா 11,999,424 இல் ரூபா 11,874,944 கடன் தொகையும் அதற்கான ரூபா 2,451,384 வட்டியையும் சபை இன்றுவரை கொடுத்துத் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

3.3 சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

-------------------------------------------

சபையினால் அதன் எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகள் மற்றும் கழிவுகள் கண்டி வீதியின் அருகில் உள்ள காட்டுப்பகுதியில் கொட்டப்பட்டு வருகின்றமையால் அங்கு காணப்படும் யானைகள் மற்றும் ஏனைய விலங்குகளுக்கு பாதிப்பாகவும் சூழல்மாசடைவதற்கு ஏதுவானதாகவும் அமைந்துள்ளது.

3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------

ஓய்வூதிய திணைக்களத்தின் 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 02/2011 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் உள்@ராட்சி நிறுவனங்களில் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்தப்படுதல் வேண்டும். எனினும் இதற்கு மாற்றமாக சபையில் கடமையாற்றிய ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்குப் பதிலாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களுக்கும் பங்களிப்புச் செய்யப்பட்டதுடன் இரண்டு ஊழியர்களுக்கான ஊழியர் நம்பிக்கை நிதி 2012 சனவரி தொடக்கம் 2014 ஏப்ரல் வரை குறித்த காலத்தில் செலுத்தப்படாதததால் அந்நிதியங்களுக்கும் ரூபா 40,919 தொகை தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

3.5 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 02 மோட்டார் சைக்கிள்களை திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாது 02 வருட காலமாக பயன்படாது காணப்படுகின்றது.

(ஆ) தம்பலகமத்தில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான சந்தைக் கட்டிடம் ரூபா. 531,996 தொகையில் 2015 திசெம்பர் 23 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 24 ஆம் திகதி வரை இக்கட்டடம் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாமல் காணப்படுகின்றது.

4. மனிதவள முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | 01 | - | -- |
| உதவியாளர்கள் | 18 | 16 | 02 | -- |
| சிற்றூழியர்கள் | 28 | 40 | - | 12 |
| | 47 | 57 | 02 | 12 |

உதவியாளர் பதவிக்கான 02 வெற்றிடங்கள் நான்கு வருட காலமாக நிரப்பப்படாமல் உள்ளது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |
| (ஆ) ஒப்பந்த முகாமைத்துவம் | i. ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது பெறுகை வழிகாட்டி பின்பற்றப்படவில்லை. |
| | ii. சன சமூக நிலையங்களுக்கு ஒப்பந்தம் வழங்கும் போது நிதி ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் பின்பற்றப்படவில்லை. |